வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3132/அ3/2024 நாள். 31.07.2024

---

பொருள் : பள்ளிக் கல்வி – 2024-2025ஆம் ஆண்டு பொதுமாறுதல் கலந்தாய்வு – மனமொத்த மாறுதல் கலந்தாய்வு – வேலூர் மாவட்டம், அரசு / நகரவை/உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் **விண்ணப்பங்களை EMIS இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய தெரிவித்தல்** – தொடர்பாக.

பார்வை : சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26366/சி3/இ1/2024 நாள்.30.07.2024.

---

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/ நகரவை/உயர்/ மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான 2024-2025ஆம் ஆண்டு **மனமொத்த மாறுதல் விண்ணப்பங்களை** கீழ்காணும் அறிவுரைகளை பின்பற்றி EMIS இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யுமாறு அனைத்து அரசு/ நகரவை/உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. மனமொத்த மாறுதல் கோரும் ஆசிரியர் தனது Individual Teacher Login – Transfr Application – Mutual Transfer என்ற மனமொத்த மாறுதலுக்கான படிவத்தில் தங்களது விவரங்களை முழுமையாக உள்ளீடு செய்ய வேண்டும். மேலும் எந்த ஆசிரியருக்கு மனமொத்த மாறுதல் அளிக்க விரும்புகிறார் என்பதனை அவ்வாசிரியரது EMIS ID (8 digit ID) யை குறிப்பிட்டு உள்ளீடு செய்ய வேண்டும். பின்னர் அப்பள்ளியின் தலைமையாசிரியர் தனது பள்ளியின் EMIS login ID யில் உள்சென்று சார்ந்த ஆசிரியர்களின் விண்ணப்பத்தில் உள்ள விவரங்களை சரிபார்த்து Approval செய்ய வேண்டும்.
2. ஓய்வு பெறுவதற்கு முன் குறைந்த பட்சம் இரு கல்வியாண்டுகள் பணிக்காலம் உள்ள ஆசிரியர்களே மனமொத்த மாறுதல் கோர தகுதியானவர்கள்
3. ஏற்கனவே 2022-2023 மற்றும் 2023-2024ஆம் கல்வியாண்டுகளில் மனமொத்த மாறுதல் ஆணை பெற்றவர்கள் தற்போது பணிபுரியும் பள்ளியில் குறைந்த பட்சம் இரு ஆண்டுகள் பணிபுரிந்து இருத்தல் வேண்டும்.
4. ஆண் ஆசிரியர்கள் இருபாலர் மற்றும் ஆண்கள் பயிலும் பள்ளிகளுக்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

# கால அட்டவணை

| வ.எண் | பொருள் | நாள் |
|---|---|---|
| 1 | மனமொத்த மாறுதல் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய நாட்கள் | 31.07.2024 முதல். 04.08.2024.வரை |
| 2 | மாறுதல் விண்ணப்பங்களின் உள்ள விவரங்களின் அடிப்படையில் அலுவலர் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டிய நாள் (Approval from competent authorities) (HM, DEO & CEO) | 05.08.2024 |
| 3 | மனமொத்த மாறுதல் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய நாட்கள் | 06.08.2024 |

// ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்